# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை – 8

## இரண்டாம் நிலை காவலர்
## இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும்
## தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு – 2025.
## அறிவிக்கை எண் : 02/2025.

**தேதி: 21.08.2025**

1. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொது தேர்வு – 2025–க்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பத்தினை **(Online Application)** வரவேற்கிறது.

**ஊதிய விகிதம் ரூ.18,200 – 67,100/-.**

| | | |
|---|---|---|
| i | அறிவிக்கை தேதி | **21.08.2025** |
| ii | இணைய வழி விண்ணப்பம் துவங்கும் தேதி | **22.08.2025** |
| iii | இணைய வழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | **21.09.2025** |
| iv | இணைய வழி விண்ணப்பம் சமர்பித்த பின்னர் திருத்தம் செய்வதற்கான கடைசி தேதி | **25.09.2025** |
| v | எழுத்துத் தேர்வு நடைபெறும் தேதி | **09.11.2025** |

**2. மொத்த காலிப்பணியிடங்கள்: 3644 + 21***

| துறை | பதவி | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலை காவலர் | 2833 | | 2,833** |
| சிறை மற்றும் சீர்திருத்தத் துறை | இரண்டாம் நிலை சிறை காவலர் | 142 | 38 | 180 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்பாளர் | 631 | 0 | 631 |

* பழங்குடியினர் (ST) பற்றாக்குறை காலிப்பணியிடங்களின் விவரம் விரிவான அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

** காவல்துறைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் G.O. (Ms) No. 388 Home (Police-IX) Department dated : 04.08.2025 – இல் குறிப்பிட்டுள்ளவாறு பணி அமர்வு செய்யப்படுவர்.

**3. சிறப்பு ஒதுக்கீடு :**

| ஒதுக்கீடு | இரண்டாம் நிலை காவலர் | இரண்டாம் நிலை சிறை காவலர் | தீயணைப்பாளர் |
|---|---|---|---|
| சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கானது (Wards-Cum-Dependent) | 10% (9+1) | 10% (9+1) | 10% (9+1) |
| விளையாட்டு வீரர்களுக்கானது (Sports Person) | 7% | 10% | 10% |
| மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கானது (Meritorious Sports Person) | 3% | - | - |
| முன்னாள் இராணுவத்தினர்களுக்கானது (Ex-Servicemen) | 5% | 5% | 5% |
| ஆதரவற்ற விதவைகளுக்கானது (Destitute Widow) | 3% | 3% | - |
| தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM) | 20% | 20% | 20% |

4. வகுப்புவாரி ஒதுக்கீடு: தற்போதுள்ள விதிகளின்படி வகுப்புவாரி இடஒதுக்கீட்டின் சதவீதம், (மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான 3% ஒதுக்கீட்டை தவிர) அனைத்து பதவிகளுக்கும் பொருந்தும். பல்வேறு பிரிவுகளை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கான இடஒதுக்கீட்டு விவரங்கள் விரிவான அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. குறைந்தபட்ச கல்வித்தகுதி: 10–ம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

6. வயது வரம்பு (01.07.2025–ன் படி): 18 வயது நிறைவுற்றவராகவும் மற்றும் 26 வயது நிறைவடையாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(விண்ணப்பதாரர்களின் வயது உச்சவரம்பு வகுப்பு / பிரிவுகளுக்கு தக்கவாறு மாறுபடும்).

**காவல்துறை தலைவர் / உறுப்பினர் செயலாளர்,**
**தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை – 08.**

குறிப்பு : விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கும், மேற்கொண்டு தகவல் அறிவதற்கும் இவ்வாரியத்தின் **www.tnusrb.tn.gov.in** என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள விரிவான அறிவிக்கையை பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

செமதொஇ/ 965 / வரைகலை/2025